
**ஜூலை – 06**

# TNPSC துளிகள்

- இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (IUML) தலைவர் K.M. காதர் மொஹிதீன் தமிழக அரசின் தகைசால் தமிழர் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- தாய்லாந்தில் நடைபெற்ற 24வது வருடாந்திர சர்வதேச மனநல மாநாட்டில், WHO தென் கிழக்கு ஆசியாவின் பிராந்திய இயக்குநரான சைமா வாஸெட் என்பவர், 2025 ஆம் ஆண்டுக்கான மனநல விருது (Mental Health Award 2025) வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- 1135.6 திட்டத்தின் கீழ் கட்டமைக்கப்பட்ட எட்டாவது ரேடாருக்குப் புலப்படாத போர்க் கப்பல் மற்றும் இரண்டாவது துஷில்-ரக கப்பலான INS தமால் ரசியாவின் கலினின் கிராட்டில் படையில் இணைக்கப்பட்டது.
- பஞ்சாபைச் சேர்ந்த ஆறு வயதான தேக்பீர் சிங், எல்ப்ரஸ் மலையில் ஏறிய இளம் மலையேற்ற வீரர் என்ற புதிய உலக சாதனையைப் படைத்தார்.
    - முன்னதாக, 2024 ஆம் ஆண்டில், கிளிமஞ்சாரோ மலையை ஏறிய இளம் ஆசிய வீரர் என்ற ஒரு பெருமையினைப் பெற்ற அவர் எவரெஸ்ட் மலைச் சிகரத்தின் அடிவார முகாமை அடைந்தார்.

# தேசியச் செய்திகள்

## ஆசியான்-இந்தியா இடையிலான பயணக் கப்பல் சுற்றுலா தொடர்பான பேச்சு வார்த்தை





- கடல்சார் உறவுகள் மற்றும் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக இந்தியா தனது முதல் ஆசியான்-இந்தியா பயணக் கப்பல் சுற்றுலா தொடர்பான பேச்சு வார்த்தையினை சென்னையில் நடத்துகிறது.
- இந்திய-பசிபிக் பகுதியில் கப்பல் போக்குவரத்து இணைப்பு, நிலையான சுற்றுலா மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் இந்தப் பேச்சுவார்த்தை ஒரு கவனம் செலுத்தியது.
- 2029 ஆம் ஆண்டிற்குள் சுமார் 5,000 கிலோ மீட்டர் நீர்வழிகளை உருவாக்கி, கப்பல் போக்குவரத்துப் பயணிகளின் எண்ணிக்கையினை ஒரு மில்லியனாக அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது.
- சாகர்மாலா மற்றும் விக்ஸித் பாரத் 2047 முன்னெடுப்புகளின் கீழ் இந்திய மற்றும்

ஆசியான் நாடுகளின் சில துறைமுகங்களை இணைக்கும் ஒருங்கிணைந்தக் கப்பல் போக்குவரத்து வலையமைப்பு உருவாக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## RailOne செயலி

- இந்திய இரயில்வே நிர்வாகமானது பயணிகளுக்கான பல்வேறு புதிய அனைத்து வசதிகள் கொண்ட RailOne செயலியினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தச் செயலியானது, இரயில்வே தகவல் அமைப்புகள் மையத்தின் (CRIS) 40வது ஸ்தாபன தினத்தில் வெளியிடப்பட்டது.
- RailOne செயலியானது பயணச் சீட்டு முன்பதிவு, உணவு வாங்குவதற்கான பதிவுகளை செய்தல் மற்றும் இரயில் பயணம் சார்ந்த விசாரணைகள் போன்ற சேவைகளை ஒரே தளத்தில் ஒருங்கிணைக்கிறது.
- பயனர்கள் RailOne மூலம் முன்பதிவு செய்யப்பட்ட, முன்பதிவு செய்யப்படாத மற்றும் நடைமேடையை அனுமதிக்க என்று அனுமதிச் சீட்டுகளை முன்பதிவு செய்யலாம்.
- RailOne ஆனது சரக்கு இரயில் சேவை சார்ந்த விசாரணைகளையும் வழங்குவதோடு, இது ஒரு முழுமையான இரயில் சேவை தளமாக அமைகிறது.
- இந்த செயலியானது இரயில் கனெக்ட், IRCTC eCatering, இரயில் மதத் மற்றும் UTS போன்ற பல பழைய செயலிகளை ஒன்றாக இணைக்கிறது.




## இந்தியாவின் புதிய விளையாட்டுக் கொள்கை 2025

- இந்தியாவில் விளையாட்டுகளை மேம்படுத்துவதற்காக என 2025 ஆம் ஆண்டு தேசிய விளையாட்டுக் கொள்கைக்கு (NSP) அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தப் புதியக் கொள்கையானது, வளர்ச்சிக்கான ஒரு நவீன திட்டத்தினைக் கொண்டு, 2001 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட பழைய கொள்கையை மாற்றுகிறது.
- NSP 2025 ஆனது, 2036 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளைப் போல உலக விளையாட்டுகளில் இந்தியாவின் நிலையை வலிமையாக்க முனைகிறது.
- இந்த முக்கியக் கொள்கையானது உலகளாவிய விளையாட்டுத் துறையில் வெற்றி, பொருளாதாரத்திற்கான விளையாட்டு, சமூக வளர்ச்சி, மக்களின் இயக்கம் மற்றும் கல்வியில் விளையாட்டு போன்ற ஐந்து முக்கிய பகுதிகளைக் கொண்டுள்ளது.
- இது மிகவும் சிறந்தப் பயிற்சி, புதியதொரு தொழில்நுட்பம், தனியார் உதவி மற்றும்

முன்னேற்றத்திற்கான தெளிவான இலக்குகளையும் ஆதரிக்கிறது.




## கல்லூரி மாணவர்களுக்கான பிரதம மந்திரி உதவித்தொகை




- அரசாங்கமானது, கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான மத்திய அரசின் உதவித் தொகை திட்டத்தின் (CSSS) கீழ், பிரதான் மந்திரி உச்சதர் சிக்சா புரோட்சஹான் (PM-USP) என்ற உதவித்தொகையினை வழங்குகிறது.
- இந்தத் திட்டமானது ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த புத்திக் கூர்மை மிக்க மாணவர்கள் தங்கள் கல்லூரிப் படிப்புகளுக்கு பணம் செலுத்த உதவுகிறது.
- மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (CBSE) ஆனது 2025-26 ஆம் ஆண்டிற்கான உதவித் தொகை திட்டத்தினை தேசிய உதவித் தொகை தளத்தில் (scholarships.gov.in) அறிவித்து உள்ளது.

- மாணவர்கள் 12 ஆம் வகுப்பு தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.
- இந்த உதவித் தொகையானது ஒவ்வொரு மாநிலத்திலும் 18 முதல் 25 வயதுடைய மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மாநிலங்களுக்கு இடையே என்று பிரிக்கப் படுகிறது.
- அறிவியல், வணிகம் மற்றும் கலைத் துறை சார்ந்த மாணவர்களுக்கு 3:2:1 என்ற ஒரு விகிதத்தில் உதவித்தொகை பகிரப்படும்.
- பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஆண்டிற்கு 12,000 ரூபாய் வழங்கப்படும்.
- முதுகலை பட்டம் படிக்கும் மாணவர்களுக்கு ஆண்டிற்கு 20,000 ரூபாய் வழங்கப்படும்.
- 5 ஆண்டு தொழில்முறைப் படிப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கு அவர்களின் 4 மற்றும் 5 ஆம் ஆண்டுகளில் ஆண்டிற்கு 20,000 ரூபாய் வழங்கப்படும்.
- இந்த உதவித் தொகையானது நேரடிப் பயன் பரிமாற்றம் (DBT) மூலம் மாணவரின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக அனுப்பப்படுகிறது.
- மாணவர்களின் குடும்ப வருமானம் ஆண்டிற்கு 4.5 லட்சம் ரூபாய்க்கும் குறைவாக இருக்க வேண்டும்.

## ஜன் சுரக்சா சந்த்ருப்தி அபியான்




- இந்தப் பிரச்சாரமானது ஜூலை 1 முதல் செப்டம்பர் 30 வரை நாடு தழுவிய அளவில் நடைபெறும்.
- அரசாங்க நலத் திட்டங்களின் கீழ் இன்னும் சலுகைகளைப் பெறாத தகுதியுள்ள குடி மக்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு அந்தச் சலுகைகளை வழங்குவதே இதன் நோக்கமாகும்.
- இதில்
    - பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா,
    - பிரதான் மந்திரி சுரக்சா பீமா யோஜனா,

- அடல் ஓய்வூதிய யோஜனா, மற்றும் ஜன் தன் யோஜனா ஆகியவை அடங்கும்.

❖ இந்தப் பிரச்சாரத்தில் ஜன் தன் கணக்குகளுக்கான KYC (உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள்) கணக்கைப் புதுப்பித்தல், புதிய கணக்குகளைத் திறப்பது மற்றும் எண்ணிம மோசடி குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவையும் அடங்கும்.

# சர்வதேசச் செய்திகள்

## மலேரியா பாதிப்பில்லா நாடு - சுரினாம்

❖ அமேசான் பிராந்தியத்தில் உலக சுகாதார அமைப்பினால் (WHO) மலேரியா இல்லாத நாடாக அறிவிக்கப்பட்ட முதல் நாடாக சுரினாம் மாறியுள்ளது.

❖ இந்த நிலையை அடைந்த உலகின் 47வது நாடு அல்லது பிரதேசம் இதுவாகும்.

❖ மலேரியா என்பது கொசுக்களால் பரவும் ஒரு கொடிய நோயாகும் என்பதோடு மேலும் இது பெரும்பாலும் வெப்பமண்டல பகுதிகளில் காணப்படுகிறது.

❖ 2030 ஆம் ஆண்டிற்குள் மலேரியாவை முற்றிலுமாக ஒழிப்பதற்கு என இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## விண்ணில் ஏவப்பட்ட H-2A ஏவுகலம்

❖ ஜப்பான் நாடானது, சமீபத்தில் 50வது மற்றும் கடைசி H-2A ஏவு கலத்தினை மிகவும் வெற்றிகரமாக விண்ணில் ஏவியது.

❖ இந்த ஏவுகலமானது பசுமை இல்ல வாயுக்கள் மற்றும் நீரியல் சுழற்சி கண்காணிப்பு செயற்கைக் கோளை (GOSAT-GW) விண்வெளிக்கு ஏந்திச் சென்றது.

❖ பருவநிலை மாற்றத்தினை ஆய்வு செய்வதற்காக என GOSAT-GW ஆனது பசுமை இல்ல வாயுக்கள் மற்றும் கடல் மேற்பரப்பு வெப்பநிலையைக் கண்காணிக்கும்.

❖ ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனத்திற்காக (JAXA) மிட்சுபிஷி ஹெவி இண்டஸ்ட்ரீஸ் நிறுவனமானது H-2A ஏவுகலத்தினை உருவாக்கியது.

❖ 2001 ஆம் ஆண்டில் முதன்முதலில் விண்ணில் ஏவப் பட்டதிலிருந்து, H-2A ஆனது ஒரே ஒரு தோல்வியுடன் மட்டும் 98% வெற்றி விகிதத்தைக் கொண்டிருந்தது.

- இந்த ஏவுகலம் ஆனது புவிநிலைச் சுற்றுப்பாதை, நிலவின் சுற்றுப்பாதை மற்றும் 2010 அகாட்சுகி வெள்ளிக் கோள் ஆய்வு போன்ற கிரகங்களுக்கு இடையேயான ஆய்வுப் பயணங்களை மேற்கொள்ளும் திறன் கொண்டது.
- 50 ஆய்வுப் பயணங்களுக்குப் பிறகு, H-2A பயன்பாடு நிறுத்தப்பட்டு, செலவு குறைந்த H3 ஏவுகலம் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப் படும்.




## சீரொளிக் கற்றையிலிருந்து பாதுகாப்பதில் தேக்கு இலைச் சாற்றின் பயன்பாடு




- பெங்களூருவிலுள்ள இராமன் ஆராய்ச்சி நிறுவனத்தின் (RRI) அறிவியலாளர்கள் தேக்கு இலை சாறு ஆனது, மிகவும் வலுவான சீரொளிக் கற்றையின் கதிர்வீச்சிலிருந்து கண்கள் மற்றும் உணர்வு அமைப்புகளைப் பாதுகாக்க முடியும் என்பதைக் கண்டு அறிந்தனர்.
- மிகப் பொதுவாக வேளாண் கழிவுகளாகக் கருதப்படும் தேக்கு இலைகள், சிறப்பு நேரியல் அல்லாத ஒளியியல் (NLO) பண்புகளை (ஒளியின் தீவிரத்தினைப் பொறுத்து பண்புகள் மாறும் இயல்பு) கொண்ட அந்தோசயனின்கள் எனப்படுகின்ற இயற்கை நிறமிகளைக் கொண்டுள்ளன.
- மிகவும் ஒரு தீவிரமான சீரொளிக் கற்றையை (லேசர்) ஒளியை உறிஞ்சும் இந்தச் சாறு தலைகீழ் நிறைவுற்ற ஒளி உறிஞ்சுதல் பண்பை (RSA - ஒளியின் தீவிரம் அதிகரிக்கும் போது பொருளின் ஒளி உறிஞ்சும் தன்மையை அதிகரித்தல்) கொண்டுள்ளது என்ற ஒரு

நிலையில், இது அந்த சீரொளிக் கற்றையிலிருந்துப் பாதுகாப்பதற்குப் பயனுள்ளதாக அமைகிறது.

- இந்த இயற்கை சாயம் சுற்றுச்சூழலுக்கு உகந்தது, மக்கும் தன்மை கொண்டது மற்றும் சீரொளிக் கற்றையிலிருந்து பாதுகாப்பதற்குப் பயன்படுத்தப்படும் பல செயற்கைப் பொருட்களுடன் ஒப்பிடும் போது மலிவானதாகும்.

## உலகளாவிய செயற்கைக்கோள் ஏவுதல் 2025

- அமெரிக்கா 2025 ஆம் ஆண்டில் சுமார் 8,530 செயற்கைக் கோள்களை ஏவியதன் மூலம் உலகிலேயே முன்னணியில் உள்ளது.
- செயற்கைக்கோள் நிலை நிறுத்துதல்களில் சீனா இரண்டாவது இடத்தில் உள்ளது, அதே நேரத்தில் ரஷ்யா மூன்றாவது இடத்தில் உள்ளது.
- மொத்தம் 136 செயற்கைக் கோள்கள் ஏவியதுடன் இந்தியா உலகளவில் 7வது இடத்தில் உள்ளது.
- செயற்கைக் கோள் நிலை நிறுத்துதல் என்பது தகவல் தொடர்பு, பாதுகாப்பு, வானிலை மற்றும் வழிசெலுத்தல் பயன்பாடுகளுக்காக விண்வெளிக்கு செயற்கைக் கோள்களை அனுப்புவதாகும்.
- ஏவப்படும் பெரும்பாலான செயற்கைக்கோள்கள் சிறிய அளவிலானவை மற்றும் மிகப் பெரும்பாலும் செயற்கைக் கோள் திரள்கள் என்று அழைக்கப்படுகின்ற, மிகவும் அதிக எண்ணிக்கையிலான குழுவாக அனுப்பப்படுகின்றன.
- விண்வெளி ஆய்வு தொழில்நுட்பக் கழகம் (ஸ்பேஸ்எக்ஸ்) மற்றும் அமேசானின் குய்பர் ஆய்வுத் திட்டம் போன்ற சில நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையிலான செயற்கைக் கோள்களை இயக்குகின்றன.
- 2025 ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் 20,000க்கும் மேற்பட்ட செயற்கைக்கோள்கள் விண்ணில் ஏவப்பட்டு முந்தைய ஆண்டின் பல சாதனைகளை முறியடிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

| Top 10 countries with the most satellites | | |
|---|---|---|
| **Rank** | **Country** | **satellites** |
| 1 | US | 8,530 |
| 2 | Russia | 1,559 |
| 3 | China | 906 |
| 4 | UK | 763 |
| 5 | Japan | 203 |
| 6 | France | 100+ |
| 7 | India | 136 |
| 8 | Germany | 82 |
| 9 | Italy | 66 |
| 10 | Canada | 64 |

## ஐஎன்எஸ் உதயகிரி

- 17A திட்டத்தின் கீழ், ஐஎன்எஸ் உதயகிரி என்ற ரேடாருக்குப் புலப்படாத போர்க் கப்பலானது ஜூலை 01 ஆம் தேதியன்று இந்தியக் கடற்படையிடம் ஒப்படைக்கப் பட்டது.

- இது மும்பையில் உள்ள மேசகான் டாக் ஷிப் பில்டர்ஸ் நிறுவனத்தின் கப்பல் கட்டும் தளத்தில் இந்தத் தொடரின் கீழ் கட்டமைக்கப்பட்ட இரண்டாவது கப்பல் ஆகும்.
- இந்தக் கப்பல்கள் பழைய சிவாலிக் ரக (திட்டம் 17) போர்க் கப்பல்களின் மேம்பட்ட வடிவமாகும்.
- இதில் மீயொலி எறிகணைகள், நடுத்தரத் தூரத் தாக்குதல் திறன் உடைய வான்வழிப் பாதுகாப்பு மற்றும் விரைந்து செயல்படும் துப்பாக்கி அமைப்புகள் போன்ற நவீன ஆயுதங்களுடன் பொருத்தப்பட்டுள்ளது.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவில் புதிய விலங்கு மற்றும் தாவர இனங்கள் கண்டுபிடிப்புகள் 2024

- இந்தியாவில் கடந்த ஆண்டு சுமார் 683 புதிய விலங்கு இனங்கள் கண்டறியப் பட்டது (459 புதிதாகக் கண்டறியப்பட்டன மற்றும் 224 புதிதாகப் பதிவு செய்யப்பட்டன).
- மொத்தம் 433 புதிய தாவர இனங்கள் அடையாளம் காணப்பட்டன (இதில் 410 புதிதாகக் கண்டறியப் பட்டன மற்றும் 23 புதிதாகப் பதிவு செய்யப்பட்டன).
- கேரளா 101 புதிய விலங்கு இனங்களுடன் (இதில் 80 புதிதாகக் கண்டறியப்பட்டன மற்றும் 21 புதிதாகப் பதிவு செய்யப்பட்டன) முன்னணியில் உள்ளது.
- அதனை அடுத்து கர்நாடகா மாநிலம் 82 புதிய விலங்கு இனங்களுடன் (68 புதிதாகக் கண்டறியப்பட்டன மற்றும் 14 புதிதாகப் பதிவு செய்யப்பட்டன) இடம் பெற்றுள்ளது.
- தமிழ்நாடு மாநிலத்தில் 63 புதிய விலங்கு இனங்கள் பதிவாகியுள்ளது (50 புதிதாகக் கண்டறியப்பட்டன மற்றும் 13 புதிதாகப் பதிவு செய்யப்பட்டன).
- அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் 72 புதிய விலங்கு இனங்கள் பதிவாகியுள்ளது (42 புதிதாகக் கண்டறியப்பட்டன மற்றும் 30 புதிதாகப் பதிவு செய்யப்பட்டன).
- இதில் மேற்கு வங்காளத்தில் 56 புதிய விலங்கு இனங்கள் பதிவாகியுள்ளது (இதில் 25 புதிதாகக் கண்டறியப் பட்டன மற்றும் 31 புதிதாகப் பதிவு செய்யப்பட்டன).
- இதில் மேகாலயாவில் 42 புதிய விலங்கு இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன (இதில் 25 புதிதாகக் கண்டறியப்பட்டன மற்றும் 17 புதிதாகப் பதிவு செய்யப்பட்டன).

- அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் 43 புதிய விலங்கு இனங்கள் (இதில் 14 புதிதாகக் கண்டறியப்பட்டன மற்றும் 29 புதிதாகப் பதிவு செய்யப்பட்டன) பதிவாகி உள்ளன.
- முக்கியமான விலங்கு கண்டுபிடிப்புகளில் இரண்டு புதிய வகை ஊர்வன இனங்கள் மற்றும் 37 புதிய ஊர்வன இனங்கள், ஐந்து புதிய நீர் நில வாழ் இனங்கள் அடங்கும்.
- கேரளாவில் அதிக எண்ணிக்கையிலான புதிய தாவர இனங்கள் (58) உள்ளன.
- மகாராஷ்டிரா மற்றும் உத்தரகாண்ட் ஆகியவை முறையே 45 மற்றும் 40 புதிய தாவர இனங்களைக் கொண்டுள்ளன.
- இப்புதிய தாவர இனங்களின் கண்டுபிடிப்புகளில் சுமார் 35 சதவீதம் ஆனது மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் வடகிழக்குப் பகுதிகளில் பதிவாகியுள்ளன.





# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உணவினை வாங்குவதற்கான திறன் சார்ந்தக் குறியீடு

- சமீபத்திய ஆண்டுகளில் இந்தியாவில் வறுமை நிலை வெகுவாகக் குறைந்துள்ளதாக புதிய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.
- 2023–24 ஆம் ஆண்டில் கிராமப்புற வறுமை 4.86% ஆகவும், நகர்ப்புற வறுமை 4.09% ஆகவும் இருப்பதாக பாரத் ஸ்டேட் வங்கி தெரிவித்துள்ளது.
- உலக வங்கியானது, கிராமப்புற வறுமை 2.8% ஆகவும், நகர்ப்புற வறுமை 1.1% ஆகவும் உள்ளது என இன்னும் குறைவான எண்களை முன்வைக்கிறது.
- இந்த எண்கள் மக்களின் உண்மையான வாழ்க்கை நிலைமைகளைக் காட்டாது என்று பல நிபுணர்கள் நம்புகின்றனர்.
- கலோரி உட்கொள்ளல் மூலம் வறுமையை அளவிடும் பழைய முறையை இந்தியா இன்னும் பயன்படுத்துகிறது.

- "உணவினை வாங்குவதற்கான திறன் சார்ந்த ஒரு குறியீடு" என்று அழைக்கப்படும் ஒரு புதிய கருத்தாக்கம், ஓர் எளிய இந்திய உணவைப் பயன்படுத்தி உணவின் மலிவுத் தன்மையை மதிப்பிடுகிறது.
- Crisil நிறுவனத்தின் மதிப்பீடுகள் ஆனது ஓர் அடிப்படை சைவ உணவினை வாங்க இந்தியாவில் சுமார் 30 ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடுகிறது.
- ஆனால் 2023–24 ஆம் ஆண்டில் கிராமப்புற மக்களில் 40% பேரும், நகர்ப்புற மக்களில் 10% பேரும் ஒரு நாளைக்கு இரண்டு உணவினையும் வாங்க முடியாத ஒரு நிலையில் இருந்தனர்.
- இதில் வறுமை நிலை குறைவாகத் தோன்றினாலும், பலர் இன்னும் மறைக்கப்பட்ட கணக்கிடப் படாத பட்டினி நிலையினால் மிகவும் அவதிப்படுகிறார்கள் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.




## உலகளாவிய யூனிகார்ன் நிறுவனங்கள் குறியீடு 2025

- ஹுருன் அமைப்பின் 2025 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய யூனிகார்ன் நிறுவனங்கள் குறியீடு ஆனது ஹுருன் ஆராய்ச்சி நிறுவனத்தினால் வெளியிடப்பட்டது.
- சுமார் 758 யூனிகார்ன் நிறுவனங்களுடன் அமெரிக்கா இதில் முதலிடத்தில் உள்ளது என்ற நிலைமையில் அதைத் தொடர்ந்து 343 யூனிகார்ன் நிறுவனங்களுடன் சீனா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- சான் பிரான்சிஸ்கோ உலகின் முன்னணி யூனிகார்ன் நகரமாகும், அதைத் தொடர்ந்து நியூயார்க் மற்றும் பெய்ஜிங் ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- புத்தொழில் நிறுவனங்களின் பிரிவில் வலுவான வளர்ச்சியைக் காட்டும் வகையில் 64 யூனிகார்ன் நிறுவனங்களுடன் இந்தியா 3வது இடத்தில் உள்ளது.
- அதிக யூனிகார்ன் நிறுவனங்களுடன் இந்திய அளவில் பெங்களூரு முன்னணியிலும், உலகளாவிய நகரங்களில் 7வது இடத்திலும் உள்ளது.

- மும்பை மற்றும் குருகிராம் ஆகியவை முறையே யூனிகார்ன் நிறுவனங்களின் எண்ணிக்கையில் உலகளவில் 22வது மற்றும் 27வது இடங்களில் உள்ளன.
- உலகளவில், 52 நாடுகளில் 1,523 யூனிகார்ன் நிறுவனங்கள் உள்ளன, அவற்றின் மொத்த மதிப்பு 5.6 டிரில்லியன் டாலர் ஆகும்.




## ஐநா SDG குறியீடு 2025

| Rank | Country | Rank | Country |
|---|---|---|---|
| 1 | Finland | 167 | South Sudan |
| 2 | Sweden | 166 | Central African Republic |
| 3 | Denmark | 165 | Chad |
| 4 | Germany | 164 | Somalia |
| 5 | France | 163 | Yemen, Republic |
| 6 | Austria | 162 | Congo, Dem. Rep. |
| 7 | Norway | 161 | Sudan |
| 8 | Croatia | 160 | Afghanistan |
| 9 | Poland | 159 | Niger |
| 10 | Czechia | 158 | Madagascar |

- ஐநா நிலையான வளர்ச்சி தீர்வுகள் வலையமைப்பின் 10வது நிலையான வளர்ச்சி அறிக்கை (SDR) 2025 சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இந்த ஆண்டு பின்லாந்து முதலிடத்தில் உள்ளது, அதைத் தொடர்ந்து ஸ்வீடன் மற்றும் டென்மார்க் ஆகியவை உள்ளன.
- ஒரு குறிப்பிடத்தக்க வகையில், முதல் 20 நாடுகளில் 19 நாடுகள் ஐரோப்பிய நாடுகளே இடம் பெற்றுள்ளன.
- இந்தியா இந்தக் குறியீட்டில் 99வது இடத்தில் உள்ளது, மேலும் 167 நாடுகள் கொண்ட இந்தப் பட்டியலில் முதல் முறையாக, முதல் 100 இடங்களில் இடம்பெற்றுள்ளது.
- தெற்கு சூடான், ஏமன், சோமாலியா மற்றும் சாட் ஆகியவை இந்தக் குறியீட்டில் கடைசி இடங்களில் உள்ளன.

- 2030 ஆம் ஆண்டுக்குள் முழுமையாக எட்டக்கூடிய அளவிலான ஒரு செயல்பாட்டில் 17 உலகளாவிய இலக்குகளில் எதுவும் இல்லை.
- SDG இலக்குகளில் 17 சதவீதம் மட்டுமே திட்டமிட்டபடி முன்னேறி வருகின்றன.

# மாநிலச் செய்திகள்

## புவிசார் குறியீடு பெற்ற எரி பட்டு

- எரி பட்டு வகையானது சமீபத்தில் புவிசார் குறியீட்டினை (GI) பெற்றது.
- இந்தப் பட்டு வகையின் உற்பத்தியானது பட்டுப் புழுக்களை வதைக்குட்படுத்தாத முறையில் மேற்கொள்ளப்படுகிறது என்பதால் 'அகிம்சைப் பட்டு' என்று அழைக்கப் படுகிறது.
- காசி சமூகம் மேகாலயா மாநிலத்தில் உள்ள எரி பட்டுத் தயாரிப்பினைத் தலைமுறை தலைமுறையாகப் பாதுகாத்து வளப்படுத்தியுள்ளது.
- எரி பட்டு என்பது குளிர்காலத்தில் மக்களை சூடாகவும், கோடையில் குளிர்ச்சியாகவும் வைத்திருக்கிறது என்பதால் பல பருவநிலைகளுக்கு ஏற்றதாக உள்ளது.
- சமீபத்தில், மேகாலயாவின் முதல்வர் கான்ராட் சங்மா பிரதமருக்கு, அம்மாநிலத்தின் கலாச்சாரப் பெருமையை மிக நன்கு அடையாளப்படுத்துகின்ற வகையில் 'ரிண்டியா பட்டு' ஒன்றைப் பரிசாக வழங்கினார்.

The almost forgotten 200-year-old art of Khneng Embroidery practised by women of Mustoh and the Shella region, Cherrapunjee, Meghalaya on Eri Silk




## மிகக் குறைந்த பாலின விகிதம் - பீகார்

- அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களிலும் 2022 ஆம் ஆண்டில் பிறப்பின் போது மிகக் குறைந்த பாலின விகிதத்தை பீகார் பதிவு செய்துள்ளது.
- இது 1,000 ஆண் குழந்தைகளுக்கு 891 பெண் குழந்தைகளை மட்டுமே பதிவு செய்து உள்ளது.
- 2020 ஆம் ஆண்டு முதல் பிறப்பின் போது பாலின விகிதம் தொடர்ந்து குறைந்து வரும் ஒரே மாநிலம் பீகார் மட்டுமே ஆகும்.
- 2020 ஆம் ஆண்டில், இந்த மாநிலத்தில் பிறப்பின் போதான பாலின விகிதம் 964 ஆக

இருந்தது, இது 2021 ஆம் ஆண்டில் 908 ஆகக் குறைந்தது, மேலும் 2022 ஆம் ஆண்டில் 891 ஆகக் குறைந்தது.

- 2022 ஆம் ஆண்டில் பிறப்பின் போது பாலின விகிதம் குறைவாக இருந்த இதர பிற மாநிலங்கள் மகாராஷ்டிரா (906), தெலுங்கானா (907) மற்றும் குஜராத் (908) ஆகியவை ஆகும்.
- மறுபுறம், நாகாலாந்தில் அதிகபட்சமாக 1,068 பெண் குழந்தைகள் பிறந்தனர், அதைத் தொடர்ந்து அருணாச்சலப் பிரதேசம் (1,036), லடாக் (1,027), மேகாலயா (972), மற்றும் கேரளா (971) ஆகியவை உள்ளன.
- 2022 ஆம் ஆண்டில் பதிவு செய்யப் பட்ட மொத்தப் பிறப்புகளில், சுமார் 52.4% ஆண் குழந்தைகளும், 47.6% பெண் குழந்தைகளும் ஆவர்.
- பிறப்புகளில் சுமார் 43% கிராமப் புறங்களில் பதிவு செய்யப்பட்டாலும், 56.5% நகர்ப் புறங்களில் தான் பதிவு செய்யப்பட்டன.
- தமிழ்நாடு, கேரளா, இமாச்சலப் பிரதேசம், பஞ்சாப் மற்றும் டெல்லி ஆகிய சில மாநிலங்களில், பெருமளவு ஏற்ற இறக்கங்கள் இருந்த போதிலும், பதிவு செய்யப்பட்ட பிறப்புகளில் பொதுவான சரிவு காணப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த இறப்புகளில், ஆண்கள் மற்றும் பெண்களின் விகிதம் முறையே 60.4% மற்றும் 39.6% ஆகும்.
- பதிவு செய்யப் பட்ட இறப்புகளில் 59.5% கிராமப்புற இந்தியாவில் நிகழ்ந்ததாகவும், 40.5% நகர்ப்புறங்களில் நிகழ்ந்ததாகவும் இந்த அறிக்கை காட்டுகிறது.




# இதரச் செய்திகள்

## காடன் ஃபோட்ராங் அறக்கட்டளை

- 14வது தலாய் லாமா "தலாய் லாமாவின் அமைப்பு தொடரும்" என்றும், காடன் ஃபோட்ராங் அறக்கட்டளையே "எதிர்கால அவதாரங்களை அங்கீகரிப்பதற்கான ஒரே அதிகாரம்" கொண்டதாக இருக்கும் என்றும் அறிவித்துள்ளார்.
- காடன் ஃபோட்ராங் என்ற சொல் லாசாவில் உள்ள டிரெபங் மடாலயத்தில் இரண்டாவது தலாய் லாமாவிலிருந்து தொடங்கிய தலாய் லாமா பரம்பரையின் தங்குமிடத்தைக் குறிக்கிறது.
- பொட்டாலா அரண்மனையானது கட்டப்பட்ட பிறகு (ஐந்தாவது தலாய் லாமாவின் ஆணையின் படி), தலாய் லாமாக்கள் இந்த இடங்களிலிருந்து விலகிச் சென்றனர்.

- தலாய் லாமாக்கள் குளிர்காலத்தில் இந்த பொட்டாலா அரண்மனையிலும், கோடை காலத்தில் நோர்புலிங்காவிலும் (பொட்டாலாவுக்கு சுமார் 100 ஆண்டுகளுக்குப் பிறகு ஏழாவது தலாய் லாமாவால் கட்டப்பட்டது) தங்கினர்.
- 1959 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 14வது தலாய் லாமா லாசாவிலிருந்து இந்தியாவுக்குத் தப்பிச் வரும் வரை இந்தப் பாரம்பரியம் பின்பற்றப்பட்டது.
- சூரிச்சில் பதிவு செய்யப்பட்ட காடன் போட்ராங் அறக்கட்டளை, தலாய் லாமாவுடன் தொடர்புடைய மூன்று நிறுவனங்களில் ஒன்றாகும்.
- இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட ஒரு அமைப்பான காடன் போட்ராங் டிரஸ்ட் மற்றும் மற்றொரு இலாப நோக்கமற்ற அமைப்பான தலாய் லாமா அறக்கட்டளை ஆகியவை மற்ற இரண்டு அமைப்புகளாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★